**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 02 April-June 2024**

# வள்ளுவம் குறிப்பிடும் நடுவுநிலைமை

**முனைவர் கா. அன்பரசு,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி),
திருப்பத்தூர் - 635 601. திருப்பத்தூர் மாவட்டம்.

## முன்னுரை

இல்லறத்திலும் வேலை செய்யும் இடங்களிலும் நடுவுநிலைமையோடு செயல்படல் என்பது மனிதனுக்கே உரித்தான ஒன்று. நடுவுநிலைமையோடு நடந்து கொண்டால் உலகத்திலும் சமுதாயத்திலும் இல்லறத்திலும் பிரச்சினைக்கே இடமில்லாது போய்விடும். ஆனால் அதை மறந்து மனிதன் தன்நிலைக்கு ஏற்பச் சற்று சாய்ந்து காணப்படுவதால் வள்ளுவர் நடுவுநிலைமையை வலியுறுத்துகிறார். முதலில் நடுவுநிலைமை என்பதன் விளக்கமும் அதன் மேன்மையும், நடுவுநிலைமையைக் கடைபிடிப்பதால் வரும் நன்மைகளும், அதைக் கடைபிடிக்காமல் இருந்தால் அதனால் ஏற்படும் இன்னல்களும், நடுவுநிலைமையை எங்கெங்கெல்லாம் கடைபிடிக்க வேண்டும் என்பதை மிகத்தெளிவாக விளக்கியுள்ளதை நடுவுநிலைமை அதிகாரத்தின் வழியாக அறியமுடிகிறது.

## நடுவுநிலையின் பொருள் விளக்கமும் அதன் மேன்மையும்

நடுவுநிலைமை என்ற சொல்லுக்கு உண்மை, நேர்மை, நீதி, நியாயம் இவைபோன்ற சொற்களின் மூலம் பொருள் கொள்ளலாம். இதனையே கீழ்க்காணும் குறளில் காணமுடிகிறது.

> **“சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
> **உட்கோட்டம் இன்மை பெறின்”**[1]

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால் அவரது சொல்லிலும் செயலிலும் நீதியும் நியாயமும் இருக்கும். இதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை எனப்படும். இதில் சொல்லும் செயலும் முரண்பாடாக இல்லாமல் இரண்டிலும் நேர்மையாக இருத்தலைப்பற்றியே வரையறுக்கிறது என்பது புலனாகிறது. மேலும் நடுவுநிலைமையின் மேன்மை தராசு முள்போன்று இருத்தல் அவசியம் என்பதை

> **“சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
> **கோடாமை சான்றோர்க்கு அணி”**[2]

ஒருவன் தராசு முள்போல இருந்து நடுநிலைமையோடு நீதியை வழங்கினால் அவனைத்தான் இவ் உலகம் போற்றும். இக்கருத்திற்கேற்ப இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் நடுவுநிலைமை என்பது நாணயமான தராசு முள் போல இருந்தது என்பதைத் திருவிவிலியத்தின் வழியாக அறியமுடிகிறது. இதற்குச் சான்றாகப் பரிசேயர்கள் எப்படி இயேசுவைப் பேச்சில் சிக்கவைக்கலாமெனச் சூழ்ச்சி செய்தார்கள். தங்கள் சீடரை ஏரோதியருடன் அவரிடம் அனுப்பி, போதகரே நீர் உண்மையுள்ளவர். எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கேற்பக் கற்பிப்பவர். ஆள்பார்த்துச் செயல்படாதவர் என்பது எங்களுக்குத் தெரியும். சீசருக்கு வரி செலுத்துவது முறையா?

இல்லையா? நீர் என்ன நினைக்கிறீர் என எங்களுக்குச் சொல்லும் என்று அவர்கள் கேட்டார்கள். இயேசு அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்து கொண்டு வெளிவேடக்காரரே ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள் என்றார். அவர்கள் ஒரு தெனாரியத்தை அவரிடம் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களிடம் இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை? என்று கேட்டார். அவர்கள் சீசருடையவை என்றார்கள். அதற்கு அவர் **"சீசருக்குரியவை சீசருக்கும் கடவுளுக்கும் உரியவை கடவுளுக்கும் கொடுங்கள் என்று அவர்களிடம் கூறினார்."**[3] இவ்வாறு இயேசு நடுவுநிலைமையாக வாழ்ந்து காட்டினார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. வாழ்க்கையில் மேடு பள்ளங்கள் என்பது போல இன்பங்களும் துன்பங்களும் உண்டு என்பதை உணர்ந்து இந்நிலைகளில் நடுவுநிலைமையிலிருந்து தவறாமல் வாழ்தல் வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த ஒருமித்த கருத்தாக வள்ளுவர்.

**"கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க்கு அணி"**[4]

வாழ்வில் உயர்வு தாழ்வு என்பது உலக இயற்கை. இந்த இரு நிலைகளிலும் நடுநிலையாக இருந்து வாழ்வதே சான்றோர்க்கு அழகு ஆகும். மேலும் வாழ்க்கையில் சில நண்பர்களும் பகைவர்களும் அந்நியர் (தெரியாத நபர்கள்) வந்து செல்வர். இவர்களிடத்திலும் எவ்வித சார்புக்கான அடையாளமும் இல்லாமல் நேர்மையாக இருக்கவேண்டும் என்பதைக் கீழ்க்காணும் குறள் வலியுறுத்துகிறது.

**"தகுதி யெனஒன்று நன்றே பகுதியால்**
**பாற்பட் டொழுகப் பெறின்"**[5]

அந்நியர், பகைவர், நண்பர் என்று வேறுபாடு பார்த்து ஒருதலை சார்பாக நிற்காமல் நடுவுநிலைமையாக இருத்தலே சிறந்த அறப்பண்பு என்பதை அறியமுடிகிறது. மேலும் இதே கருத்தினை **"ஓரம் சொல்லேல்"**[6] நடுவு நிலைமை பிறழ்ந்து ஒருபக்கம் சார்ந்து கருத்துரைக்காதே என்கிறது ஆத்திசூடி. இவ்வாறு நடுவுநிலைமையின் விளக்கமும் அதன் மேன்மையும் அறிவதோடு, இதனால் ஏற்படும் நன்மைகளையும் அதன் சிறப்புகளையும் காணமுடிகிறது.

**நடுவுநிலைமையைக் கடைபிடிப்பதால் வரும் நன்மைகளும் சிறப்புகளும்**

நடுவுநிலைமையோடு வாழ்ந்தவர்களின் பேர் பட்டியலில் சட்டென்று நினைவுக்கு வருபவர் மனுநீதிச் சோழன்.

**"சால மறைத்து ஓம்பிச் சான்றவர் கைகரப்ப,**
**காலை கழிந்ததன் பின்றையும் மேலைக்**
**கறவைக் கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்**
**முறைமைக்கு மூப்பு இளமை இல்"**[7]

நீதி வழங்குதல் என்பது இளமை முதுமை பார்த்தல் ஆகாது என்றும் மேலும் நீதி என்பது மற்ற உயிரினங்களுக்கும் அப்பாற்பட்டது என்பதும் தெரிகிறது. ஆனால் இன்று நீதி, நேர்மை, உண்மை என்பது பெரும்பாலான நேரங்களில் உறங்கிக்கொண்டு உள்ளது என்பதை இல்லறத்திலும் குறிப்பாகச் சமூதாய அரசியல் அமைப்பிலும் காணமுடிகிறது.

ஆகவே இந்த நடுவுநிலைமையின்படி வாழ்ந்தால் ஒருவனின் செல்வம் அழியாமல் இருப்பதோடு அடுத்த தலைமுறைக்கும் நிலையான பயன் உண்டு என்பதைக் கீழ்க்காணும் குறள் மூலம் அறியமுடிகிறது.

**“செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து”**[8]

நடுவுநிலைமையோடு வாழும் ஒருவனின் செல்வம் அழியாமல் இருக்கும். அது அடுத்த சந்ததியாருக்கும் நிலையான பயன் அளிக்கும் என்பதை அறியமுடிகிறது. மேலும்

**“நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை**
**ஆன்றே ஒழிய விடல்”**[9]

நடுவுநிலைமை தவறுவதால் ஏற்படக்கூடிய பயன் நன்மை தரக் கூடியதாக இருந்தாலும் அந்தப் பயனைக் கைவிட்டு நடுநிலைமையைத்தான் கடைபிடிக்க வேண்டும்.

**செய்யும் தொழிலில் நடுவுநிலைமையும் இன்றைய நடைமுறையும்**

ஒருவர் தனியாகவோ அல்லது மற்றவரிடம் சென்று பணிபுரிய வேண்டிய நிலை காணப்படுகிறது. இத்தகைய சூழலில் மற்றவரிடம் செய்யும் வேலையாக இருந்தாலும் நடுவுநிலைமையோடு செயல்படுதல் வேண்டும் என்றும் அல்லது சுயமாக வணிகம் செய்தாலும் நடுநிலைமையோடு செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது கீழ்க்காணும் குறள்,

**“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின்”**[10]

தம்மிடம் உள்ள பொருளின் மதிப்பை மதிப்பதுபோல மற்றவரிடம் உள்ள பொருளின் மதிப்பையும் சரியாகக் கருதி வாணிகம் செய்வதே நல்ல வணிக முறையாகும். ஆனால் இன்று இது எந்த அளவிற்கு சாத்தியம் ஆகிறது? வணிகம் என்ற பெயரில் சில்லறை வியாபாரிகள் முதல், பெரிய முதலாளிகள் வரை உணவாக இருந்தாலும் அல்லது மருந்தாக இருந்தாலும் முதலீட்டை முன்வைத்து உண்மை என்ற நிலை மறந்து வாழுகின்ற நிலைமையை உலகத்தில் காணமுடிகிறது. இத்தகைய நிலையை திருவிவிலியம் எச்சரிக்கிறது. **“ஐயோ பரிசேயரே உங்களுக்குக் கேடு நீங்கள் புதினா, கறியிலை மற்றும் கீரைச் செடி வகைகள் எல்லாவற்றிலும் பத்திலொரு பங்கைக் காணிக்கையாகப் படைக்கிறீர்கள் ஆனால் நீதியையும் கடவுளின் அன்பையும் பொருட்படுத்துவதில்லை.”**[11] என்று கூறியுள்ளதை அறியமுடிகிறது. ஆகவே செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் நடுநிலைமையிலிருந்து நழுவாமல் இருத்தலே மனித இனத்திற்குரிய மகத்தான அறப்பண்பாகக் கருதப்படுகிறது.

**முடிவுரை**

நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தின் வழியாக நடுவுநிலைமை சொல்லிலும் செயலிலும் இருத்தல் வேண்டும் எனவும் எல்லாச் சூழலிலும் நடுவுநிலைமையோடு செயல்பட வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1) புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.61.
2) மேலது, ப. 61.
3) மத்தேயு, மத்தேயு நற்செய்தி, புதிய ஏற்பாடு திருவிவிலியம், ப. 37.
4) புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 60.
5) மேலது, ப. 58.
6) ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஆத்திசூடி, நீதி நூல்கள், 47.
7) க.ப. அறவாணன், புதிய பார்வையில் ப.கீ.க. பழமொழி, ப.130.
8) புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 59.
9) மேலது, ப. 59.
10) மேலது, ப. 62.
11) லூக்கா, லூக்கா நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.107.